# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜா ம க் கா ர ன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1கொரி. 2:15

**VOLUME - 9 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 10**
**OCTOBER 2025 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**
E-mail : jamakaran@yahoo.com. jaamakkaran@gmail.com Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பான வாசகர்களுக்கு
வாழ்த்துகிறேன்

உங்கள் எல்லாருடைய ஜெபத்துக்கும் மிக்க நன்றி. நானும் கர்த்தரின் கிருபையால் நன்றாக சுகம் பெற்றேன். ஆனால் வீட்டை விட்டு வெளியில் வரும் பெலம் இல்லை. உங்கள் அனைவரின் பண உதவிக்கும் மிக்க நன்றி கூறுகிறேன்.

இம்முறை **நமது சிந்தனைக்கு** சங்கீதம் 63 எடுத்துக்கொள்வோம். எங்கள் குடும்ப ஜெபத்தில் முறையாக வாசித்த வேத பகுதி சங்கீதம் 63 ஆக இருந்தது.அதை வாசித்து தியானித்தபோது நம் நல்ல சிந்தனைக்கு இந்த பகுதியை வைத்துக்கொள்ள விரும்பினேன்.

முதலாவது இந்த சங்கீதம் எழுதப்பட்ட சூழ்நிலையை கவனிப்போம். தாவீது தன் சத்துருக்களுக்கு பயந்து வனாந்திரத்தில் ஒளிந்து கொண்டிருந்த போது எழுதின சங்கீதம் என்று அறிகிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் 7ம் வசனத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலையில் உம்மை பார்க்க ஆசை என்கிறான்.

**OCTOBER- 2025**

சூழ்நிலை என்ன? வறண்டதும், விடாய்த்ததும், தண்ணீரற்றதும்மான இந்த சூழ்நிலையை **வெறுக்காமல் முருக்காமல்** இந்த நிலையிலேயே உம்மை துதிக்க விரும்புகிறேன் என்கிறான்.

இது கொஞ்சம் வித்தியாசமான அனுபவமாக இல்லை! நம் வாழ்க்கையில் சில நெருக்கங்கள் அல்லது வீட்டில் **மரணம்** நிகழ்ந்தால், அல்லது பண விஷயத்தில் பெரும் **நஷ்டம்** உண்டானால் இது ஏன் எனக்கு வந்தது? நான் உம்முடைய பிள்ளையல்லவா! இது எனக்கு நேரிடலாமா? என்ற கேள்வி எழும்போது மனுஷரீதியாக நாம் ஆத்துமாவில் **சோர்வுற்று தளர்ந்து** விடுகிறோம்.தாவீது கூறுகிறான்: நீர் எனக்கு **துணையாயிருந்ததினால்** நெருக்கத்தின் **மத்தியிலும்** உமது செட்டைகளின் நிழலிலே இருப்பதால் களி கூறுகிறேன் என்கிறான்.


வியாதியின் அல்லது துன்பத்தின் மத்தியில் அனுபவிக்கிற ஒரு **ஆவிக்குறிய சந்தோஷமுண்டு** கர்த்தரை உண்மையாக விளங்கிக் கொண்டதனால் அநேக பிரச்சனைகளை **முருமுருப்பில்லாமல்** அனுபவிப்பான். அதனால் தான் தாவீது தான் அனுபவித்த நெருக்கத்தை தொடர்ந்து அனுபவித்ததால் அதில் தேவ பிரசன்னத்தை உணர்ந்தான். அந்த தெய்வ பிரசன்னத்தை அனுபவித்தவனாக **அப்படியே உம்மை பார்க்க** ஆசை என்கிறான்.

அன்பானவர்களே! உங்கள் தோல்விகளில் வியாதியில் சோர்ந்து போகாமல் அவைகளில் கர்த்தருடன் சமாதனாத்தை அனுபவிக்க முயலுங்கள். நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அனுபவித்த அவமானம் பாடுகள் இவைகளை இயேசு காரணமில்லாமல் அனுபவித்தார். உங்கள் கவலைகளில் அவரை நினைத்துக் கொள்ளுங்கள் சோர்ந்து போக வேண்டாம் நம் **இயேசு நல்லவர்.**

அன்பானவர்களே! நான் இப்போது நன்றாக இருக்கிறேன். வியாதிகள் நீங்கின. பலவீனம் தான் இருக்கிறது.நான் அலுவலகத்தில் சென்று எழுத உட்கார்ந்தால் ஒரு 20 நிமிடத்தில் ஒரு **சோர்வு அல்லது தளர்வு** உண்டாகிறது. அது **வியாதியின் காரணம் இல்லை** வயது **மூப்பின்** (வயது 86) **காரணமாக** உண்டாகிறது கொஞ்ச நேரம் படுத்து எழுந்தால் அந்த சோர்வு நீங்கிவிடுகிறது.அதனால் ஜாமக்காரன் பத்திரிக்கைகான செய்திகளை கொஞ்ச கொஞ்சமாக எழுதியும் மற்றவர்கள் எழுதும் நல்ல செய்திகளைத் தெரிந்தெடுக்கப்பட்ட செய்தியை தெரிந்தெடுத்து தொகுத்தும் ஜாமக்காரனை வெளியிடுகிறேன். அதனால் நான்கு மாத ஜாமக்காரன் பத்திரிக்கையை தாமதமாக இணைத்து வெளியிடுகிறேன்.

இனி **மாதா மாதம்** ஜாமக்காரனை **எதிர்பார்க்காதீர்கள். வருடங்கள்** கூடகூட என் **ஆயுளும்** கொஞ்ச கொஞ்சமாக **குறைந்துவருவதை** நன்றாக உணருகிறேன்.தொடர்ந்து **ஜாமக்கார** பத்திரிக்கையை **வெளியிட முடியுமா?** என்று சந்தேகத்தில் இருக்கிறேன். ஜெபியுங்கள். நானும் ஜெபிக்கிறேன். **பணம் காரணமல்ல** என் **வயது மூப்பின் காரணமாக உண்டான உடல் பலவீனமும்** தான் என்னை இப்படி எழுத வைக்கிறது.

- **Dr புஷ்பராஜ்**



# காபிரியேல்

-Selected- Dr. தியோடர் வில்லியம்ஸ்



இரட்சகருடைய பிறப்பைப் பற்றி நாம் திருமறையில் வாசிக்கும்பொழுது அந்த பிறப்பில் மனிதர்களைப் பற்றி மட்டுமல்ல தேவதூதர்களைப் பற்றியும் வாசிக்கிறோம். மத்தேயு எழுதின நற்செய்தி நூலிலும் லூக்கா எழுதின நற்செய்தி நூலிலும் அநேக முறை தேவ தூதர்கள் குறிக்கப்படுகிறார்கள், லூக்காவிலே அதிகமாக இந்த தேவ தூதர்களைப்பற்றி வாசிக்கிறோம். முதல் அதிகாரத்திலும் இரண்டாவது அதிகாரத்திலும் தூதர்களைப்பற்றி வாசிக்கிறோம். தேவ தூதர்களைப்பற்றி திருமறை என்ன கூறுகிறது? எபிரேயருக்கு எழுதின நிரூபம் முதல் அதிகாரத்தில் சில சத்தியங்களைப் பார்க்கிறோம்.

தேவதூதரைக் குறித்தோ **தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும். தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜ்வாலைகளாகவும்** செய்கிறார் என்று சொல்லியிருக்கிறது. (எபிரேயர் 1:7) தேவ தூதர்கள் காற்றைப்போலவும் அக்கினி ஜ்வாலையைப் போலவும் மகிமையுள்ளவர்களாகவும் பிரகாசமுள்ளவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் கடவுளுக்கு ஊழியக்காரர்களாய் இருக்கிறார்கள் என்பது இந்த வசனத்திலிருந்து தெளிவாகிறது. அதே அதிகாரம் 14வது வசனத்தில் இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா? என்று பார்க்கிறோம். தேவதூதர்கள்

இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்கு பணிவிடை செய்யும் ஆவிகளாயிருக்கிறார்கள் என்று இந்த வசனத்திலிருந்து அறிந்து கொள்ளுகிறோம். மீட்பின் மகிமையை அனுபவித்தவர்கள் மனிதர்தான். தேவதூதர்கள் அந்த இரட்சிப்பை காண்பதற்கு ஆவலாய் இருந்தார்கள்.

ஆனால், இந்த இரட்சிப்பை அவர்கள் அனுபவிக்க முடியாது. ஏன் ? அவர்கள் பாவத்தில் விழவில்லை. அவர்களுக்காக, அவர்களை இரட்சிப்பதற்காக இரட்சகர் வரவில்லை. பாவத்தில் விழுந்த தேவ தூதர்கள் முரட்டாட்டம் பண்ணினார்கள். அவர்கள் தண்டனைக்காக ஒதுக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கென்று இரட்சிப்பின் திட்டத்தை தேவன் ஏற்படுத்தவில்லை. ஆனால் மனிதருக்ககோ மீட்பின் திட்டத்தை ஏற்படுத்தினார். இப்படி மீட்கப்படும் மக்களுக்கு ஊழியம் செய்வதற்காக தேவ தூதர்கள் இருக்கிறார்கள் என்று நாம் திருமறையில் பார்க்கிறோம். இந்த தேவ தூதர்களை நாம் வணங்க கூடாது என்றும் வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்து அறிந்து கொள்ளுகிறோம். தூதர்களின் பெயர்கள் சாதாரணமாக திருமறையிலே கொடுக்கப்படவில்லை. ஆனால் இரண்டு தூதர்களின் பெயர்கள் மட்டும் திருமறையில் குறிக்கப்படுகிறது. முதலாவது தாணியேல் நூலிலே 10வது அதிகாரத்திலே ஒரு தூதனைப் பற்றி பார்க்கிறோம்.

பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள் மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான். ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மகாவேல் எனக்கு உதவியாக வந்தான். ஆதலால் நான் அங்கே பெர்சியாசவின் ராஜாக்களிடத்தில் தரித்திருந்தேன். (தானி 10:13) என்று வாசிக்கிறோம். அதே அதிகாரத்தில் மறுபடியும் இந்த மிகாவேலைக் குறித்து நாம் பார்க்கிறோம். இந்த மிகாவேலைக் குறித்து தானி10:20,21 ஆவது வசனத்தில் நான் உன்னிடத்திற்கு வந்த காரணம் இன்னதென்று உனக்குத் தெரியுமா? இப்போது நான் பெர்சியாவின் பிரபுவோடே யுத்தம்பண்ண திரும்பிப் போகிறேன். நான் போனபின்பு கிரேக்கு தேசத்தின் அதிபதி வருவான். சத்திய எழுத்திலே கண்டிருக்கிறதை நான் உனக்கு தெரிவிப்பேன். உங்கள் அதிபதி யாகிய மிகாவேலைத் தவிர என்னோடே கூட அவர்களுக்கு விரோதமாய்ப் பலங்கொள்ளுகிற வேறொருவரும் இல்லை என்று வாசிக்கிறோம். அங்கே மிகாவேல் என்கிற தூதனைக் குறித்து நாம் பார்க்கிறோம்.

லூக்கா முதல் அதிகாரத்திலே காபிரியேல் என்கிற தூதனைப்பற்றி நாம் பார்க்கிறோம். இந்த இரண்டுதூதர்கள்களின் பெயர் மட்டும் நமக்குத் திருமறையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. காபிரியேலைக்குறித்து என்ன பார்க்கிறோம்? லூக்கா 1:11அவது வசனம் அப்பொழுது கர்த்தருடைய தூதன் ஒருவன் தூபபீடத்தின் வலதுபக்கத்திலே நின்று அவனுக்குத் (சகரியாவுக்கு) தரிசனமானான் என்று எழுதியிருக்கிறது. பிற்பாடு 19வது வசனத்தில் தேவ தூதன் அவனுக்குப் பிரதியுத்தரமாக , நான் தேவ சந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன் உன்னுடனே பேசவும் உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பப்பட்டு வந்தேன். என்று கூறுகிறார். அதே காபிரியேல் 26,27 ஆவது வசனத்தில் மரியாளுக்கு தரிசனமாகிறார். ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும்தூதன் கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில் தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டான். அந்த கன்னிகையின் பேர் மரியாள் என்று வாசிக்கிறோம். இப்படி இந்த தேவ தூதர்களின் பெயர் காபிரியேல் என்று முதல் அதிகாரத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. 2வது அதிகாரத்தில் 10 வது வசனத்தில் தேவதூதன் என்று மட்டும் அவன் குறிக்கப்படுகிறான். அவனது பெயர் அங்கு கூறப்படவில்லை. ஒரு வேளை அதுவும் காபிரியேல் தூதனாகவே இருந்திருக்கலாம்.

மிகாவேல் என்கிற பெயருக்குப் பொருள் என்ன ? கடவுளுக்குச் சமமானவர் யார் ? ஒப்பற்ற கடவுளின் பிரதிநிதியாக மிகாவேல் வந்தான் என்று இந்தப் பெயரிலிருந்து தெளிவாகிறது. காபிரியேல் என்கிற பெயரின் பொருள் தெய்வ மனிதன் என்பது கடவுளுக்கு அர்ப்பணம் செய்தவன் அவருடைய திட்டத்திற்கு முழுவதுமாகத் தன்னை விடுக்கொடுத்தவன் என்பது பொருளாகிறது. காபிரியேல் தூதனைப்பற்றி சில விவரங்களை நாம் கவனிப்போம். ஒரு தேவ ஊழியன் கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுகிறவன் எவ்விதமாக இருக்க வேண்டும் என்பது இவனுடைய அனுபவத்திலிருந்து நமக்குத் தெளிவாகிறது.

காபிரியேல் தூதனை பற்றி லூக்கா 1:19வது வசனத்தில் சில விவரங்களை நாம் வாசிக்கிறோம். தேவதூதன் அவனுக்குப் பிரதியுத்தரமாக நான் தேவ சந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன். உன்னுடனே பேசவும் உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும்

அனுப்பட்டு வந்தேன் என்று கூறுகிறான். அவனுடைய செய்தியைக்கேட்டு சகரியா சந்தேகப்படுகிறாள். அதை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறான். அப்பொழுது சகரியா தேவதூதனை நோக்கி இதை நான் எதினால் அறிவேன். நான் கிழவாயிருக்கிறேன் என் மனைவியும் வயது சென்றவளாயிருக்கிறாளே என்றான். (லூக் 1:18) அவன் தன்னுதிடைய சூழ்நிலையை நோக்கிப் பார்த்துவிட்டு தனக்கு மகன் பிறப்பான் என்கிற செய்தியை ஏற்றுக்கொள்ளுவதற்குத் தயங்கிறான். இதற்கு அடையாளம் என்ன? எப்படி நான் இதை நம்பமுடியும் என்று கேட்கிறான். அதற்குப் பிரதியத்தரமாக காபிரியேல் தன்னை அறிமுகப்படுத்துகிறான். தனது பெயர் என்னவென்றும் தனது நிலை மற்றும் பதவி என்னவென்றும் கூறுகிறான். தேவ சந்நிதானத்தில் காபிரியேல் நான் என்று தன்னை அறிமுகப்படுத்துகிறான். பிறகு தேவசந்நிதானத்தில் நிற்கிறவன் என்று கூறுகிறான். அவனுடைய இருப்பிடம் தேவனுடைய சமூகம் என்பது இதிலிருந்து தான் தெளிவாகிறது.

அருமையான சகோரனே, சகோதரியே நாம் தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டுமானால் முழுவதும் தெய்வ மனிதன் என்று அழைக்கப்படும் நிலையில் இருக்க வேண்டும் நம்முடைய வாழ்க்கை முழுவதுமாய் அவருக்கு அர்ப்பணிக்கப்பட்டது. அவருக்குமட்டும் சொந்தமானது என்கிற நிலையில் நாம் இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல அவருடைய சமூகத்திலே ஜிவிக்கிவர்களாய் நாம் இருக்க வேண்டும். தேவ சமூகம் நிம்மதிடைய வாழ்க்கையைச் சூழ இருக்கவேண்டும். அப்பொழுது மாத்திரமே அவருடைய ஊழியக்காரர்கள் என்ற தகுதி பெற்றவர்களாக இருக்க முடியும்.

இன்னும் அவர் தன்னைக் குறித்து என்ன கூறுகிறார்? உன்னுடனே பேசவும் உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பட்டு வந்தேன் என்று கூறுகிறார். தேவனால் ஊழிஞ்செய்ய அவருடைய கட்டளையை நிறைவேற்ற எப்பொழுதும் அவர் சமூகத்தில் காத்திருக்கிறவர்கள்.

எவ்வளவு அருமையான கருத்து பாருங்கள் ! கர்த்தருடைய சமூகத்திலே தரித்திருந்து அவருடைய வார்த்தைக்குக் காத்திருந்து அவருடைய சித்தத்தை நிறைவேற்ற தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள்தான் ஊழியக்காரர்கள் நற்செய்தி என்கிற வார்த்தை உண்மையாகவே இயேசுகிறிஸ்துவின் இரட்சிப்பைப் பற்றிய நற்செய்திக்குப் பயன்படுத்தப்படும் வார்த்தையாகும். மனிதர் மீட்கப்பட்டவர்கள் தான். நற்செய்தியை

அறிவிப்பதற்காக அழைப்பு பெற்றவர்கள். ஆனால் இங்கே காபிரியேலும் நற்செய்தியை அறிவிப்பதற்காக அனுப்பட்டுகிறான. இரட்சகரின் பிறப்பைப்பற்றிய நற்செய்தியை அறிவிக்கும் சிலாக்கியம் காபிரியேலுக்குக் கிடைத்தது. இவ்விதமாக கடவுளின் சமூகத்திலிருந்து அவருடைய வார்த்தைக்குக் காத்திருந்து அவரால் அனுப்பப்படும் சிலக்கியத்தைக் காப்பிரயோல் பெற்றிருந்தார்.

லூக்கா 1:26,27,28 வது வசனங்களை எடுத்துப்பார்ப்போம். ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன் கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில் தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகை யினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டான். அந்தக் கன்னிகையின் பெயர் மரியாள் அவன் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து குருவை பெற்றவனே வாழ்க. கர்த்தர் உன்னுடனே இருக்கிறார். ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்.

காபிரியேல் தூதன் கடவுளின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக அவர் சமூகத்தில் காத்திருந்தவன் முழுவதுமாக தன்னை அவருக்கு அர்ப்பணித்து அவருக்குக் கீழ்படியும் நிலையில் இருந்தவன் ஆகையினாலே தேவலாயத்திற்கு அனுப்படுகிறான். நாசரேத் ஊருக்கு அனுப்பப்படுகிறான். எவ்வளவு பெருத்த வித்தியாசம் பாருங்கள். எருசலேம் நகரம் பரிசுத்த நகரம் என்று கருதப்பட்டது. அந்த நகரத்திலும் விசேஷமான ஒரு இடம் தேவாலயம். அது தேவ மக்களுக்கு விசேஷமான ஒரு இடமாக இருந்தது. அந்த இடத்திலே தூபம் காட்டும் இடத்திலே சகரியாவுக்கு தூதன் தரிசனமாகிறான். ஆனால் நாசரேத் ஊரோ அசுத்தத்திற்கும் துன்மார்க்கத்திற்கும் பேர் பெற்ற ஒரு ஊராய் இருந்தது. பாவம் நிறைந்த ஒரு ஊராய் இருந்தது. அந்த ஊரிலுள்ள ஒரு சாதாரண கன்னிகைக்கு செய்தி கொடுக்கும்படியாக அனுப்படுகிறதான்.

தேவனின் திட்டத்திற்கு நாம் கீழ்படியும் பொழுது நம்மை ஒப்புக்கொடுத்திருக்கும் பொழுது எந்த இடமானாலும் சரி, இறந்த இடத்திற்கு அவருடைய நாமத்திலே செல்லுதற்கு ஆயத்தமுள்ளவர்களாய் இருப்போம். தூய்மையுள்ள இடமானாலும் சரி. அசுத்தமுள்ள பாவம் நிறைந்த இடமானாலும் சரி. பட்டணமானகாலும் சரி. கிராமமானலும் சரி தேவாலத்திற்குள் இருக்கும் பரிசுத்த ஸ்தலமானாலும் சரி, சாதாரண ஒரு வீடானாலும் சரி எங்கேயும் அவருடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்காகச் செல்லுவோம்.

என் அருமையான நண்பனே தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதில் தான் உன் பாதுகாப்பு உண்டு. உனது சூழ்நிலை அல்லது நீ செல்லுகிற இடம். நீ வாழுகிற இடம் முக்கியமல்ல. எந்த இடத்திலே அவருடைய திட்டத்தை நிறைவேற்றுகிறாயோ அதிலே தான் விசேஷம் அடங்கியிருக்கிறது. இதை காபிரியேல் நன்றாய் அறிந்திருந்தான்? அதுமட்டுமல்ல காபிரியேல் நன்றாய் கடவுளுடைய திட்டத்தையும் அவருடைய உள்ளத்தையும் நன்றாய் அறிந்திருந்தான். அவர் என்ன செய்தியைச் சொல்லச் சொன்னாரோ அதை அப்படியே தெளிவாகக் கூறுகிறான். இதுவும் தேவ ஊழியருக்கு இருக்கவேண்டிய ஒரு தன்மையாகும்.

தேவன் நம்மிடத்தில் என்ன சொல்லச் சொல்லுகிறாரோ அதை நாம் தெளிவாச் சொல்ல வேண்டும். வேத வசனத்தை நன்றாய் கற்றறிந்து அவரது சித்தத்தை ஆழமாய் அறிந்தவர்கள் தான். அவருடைய தூதர்களாய் செய்தியாளர்களாய் இருக்கமுடியும். கர்த்தருடைய செய்தியாளர்களாய் இருக்க முடியும், கர்த்தருடைய நாமத்திலே மக்களிடத்தில் நீ பேச வேண்டுமானால் அவருடைய உள்ளத்தையும் சித்ததையும் அறிந்தவனாய் இருக்கவேண்டும். அவருடைய வேத வசனத்ததை நன்றாய் கற்று அவர் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை அறிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் தெளிவான முறையிலே அவருக்கு ஊழியம் செய்யமுடியும்.

## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

குறிப்பு: கத்தோலிக்க சபையின் கன்னிகை ஸ்திரி (கன்னியாஸ்திரி) இரட்சிக்கப்பட்டு மாதாவிடம் ஜெபிப்பதை **விட்டுவிட்டார்.** மரித்த **பரிசுத்தவான்களோடு** ஜெபிப்பதையும் நிறுத்தினார். இயேசுவிடம் மட்டுமே ஜெபித்து சாட்சியுடன் வாழ்ந்து கர்த்தரின் பாதத்தில் சேர்ந்தார்.

# Sis Rev. **மேரி பெர்னார்டு**

- Selected



Sis Rev. Marie Bernard

இலங்கை தீவில் **செல்லும்** பாரம்பரியமும் நிறைந்த ஒரு குடும்பம் எங்களுடைய குடும்பம். இதில் திரு.ஜோத்தன் பெர்னார்டு, திருமதி ரோஸ்லி பீசிஸ் இவர்களுடைய மகளாக பிறந்தேன். எனது பெற்றோர் அனைத்து குழந்தைகளையும் கடவுள் சேவை செய்ய ஒப்புக்கொடுத்தார்கள். என்னை தொடர்ந்து எனது தம்பியும் இறைப்படிப்புக்காக (Father) கடந்து போனார். இலங்கையில் கன்னியர் மடத்தில் படிப்பையும் பயிற்சியையும் முடித்து ரோமன் கத்தோலிக்கின் நேரடி கட்டுப்பாட்டில் இருந்த ஒரு கல்லூரியில் 16 ஆண்டுகள் பேராசிரியராக பணி செய்தேன். இலங்கை முழுவதும் பாட சாலை கமிட்டியில் முக்கிய பொறுப்புகள் வகித்தேன். பின்பு மேல்படிப்புக்காக ரோமில் அனுப்பப்பட்டேன்.

**ரோமில்** 5 வருட பயிற்சி, **இங்கிலாந்தில்** 2 வருட பயிற்சி, **ஜெர்மானியில்** 3 மாதம் பயிற்சி, **ஆஸ்திரேலியாவில்** 6 மாத பயிற்சி, **இஸ்ரேலில், யோர்தான், தாய்லாந்தில்** பயிற்சிகள். வெற்றியோடு பயிற்சி முடித்து திரும்பினேன். பின்பு இலங்கையில் மிக முக்கிய பொறுப்புகள் தந்தார்கள். பிஷப்புகள் மாநாட்டில் Joint Secretary ஆக நியமிக்கப்பட்டேன். வர்த்திக்கான் தலைமையிடத்தில் **நேரடி தொடர்பில்** இருந்தேன். இந்தியா உட்பட உலக நாடுகளில் இராஜ மரியாதையுடன் சுற்றுப்பயணம் செய்தேன்.

எனக்கு எந்தவித குறைவும் இல்லை. ரோம் வர்த்திக்கான் உட்பட அனைவரிடமும் தனி மரியாதை பெற்றுக்கொண்டேன். அடிமட்டத்திலிருந்து மேல் மட்டம்வரை எவ்வித

குற்றச்சாட்டுகளும் என்மேல் இல்லை. என்னை வளர்த்தி ஆளாக்கி உலகம் முழுவதும் கொண்டு போனது **ரோமன் கத்தோலிக்க சபை.** இப்படியாக என் பெயரும் செல்வாக்கும் உச்சியில் இருந்தது. எனக்கும் எனது R.C. சபைக்கும் எந்தவொரு பிரச்சனையும் இல்லை.

இந்த நிலையில் ஒரு அம்மா வந்து என்னிடம் பேசும்போது கேட்டார்கள். நீங்கள் மறுபடி **பிறந்திருக்கிறீர்களா?** என்று நான் கேட்டேன் அப்படி என்றால் என்ன? என்று. ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்க வேண்டும். (யோவான் 3) அப்படியென்றால்தான் மோட்சம் போக முடியும் என கூறி சென்றார்கள். எனக்கு இரவு தூக்கமே வரவில்லை. ஒரே குழப்பமாய் இருந்தது. இதுபோன்று ஏன் என்னிடம் இப்படி கேட்டார்கள் என சிந்தித்து சிந்தித்து குழம்பிப்போனேன்.. இரவு எழும்பி ஜெபிக்க ஆரம்பித்தேன். ஆண்டவர் தெளிவாய் உணர்த்தினார்.

ஒரு தீர்மானத்திற்கு வந்தேன். எனக்கு **மறுபடி பிறக்கவேண்டுமென்று ஆசை**. என்னை நம்பி தந்திருந்த பொறுப்பை விட்டுப்போக வருத்தமாக இருந்தது. வத்திக்கானில், இலங்கையில் குடும்பத்தில் மிகுந்த மனவேதனை உண்டாகும் என தெரியும். உயிருக்கு கூட அச்சுறுத்தல் வரும் என தெரியும்.ஆனாலும் எனக்கு **மறுபடி பிறந்து** இயேசு அப்பாவை காண வேண்டும் என துடித்தேன்.

அவசரமாக விமானத்தில் யோர்தான் போய், யோர்தான் நதியில் **ஞானஸ்நானம்** பெற்றுக்கொண்டேன். இக்காரியத்தை மறைத்து வைத்திருக்கலாம். என்னைப்போல் என்னோடு இருப்பவர்களும் **மறுபடி பிறக்கணுமே** என எண்ணி காண்பவரிடம் அறிவித்தேன். இது இலங்கை முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது. இந்த நிலையில் ரோமிலிருந்து நேரடியாக வந்து நமது R.C.விசுவாசத்தை மறுதலிக்க வேண்டாம். தொடர்ந்து இங்கேயே பணியாற்றுங்கள் என் அன்பு கட்டளையிட்டார்கள். முடிவெடுக்க முடியாமல் திணறினேன். இயேசுவா – ரோமன் கத்தோலிக்க விசுவாச பிரமாணமா என பல்வேறு யோசனைகள் ஓடியது. ஜெபித்தேன்.

ஓர் தீர்மானத்துக்குள் வந்தேன். ஒரே ஒரு வாழ்க்கை, அது இயேசுவிற்காக. இப்படியாக 1992ல் எனது சொந்த ஊர் வந்தேன். அங்கிருந்து கொண்டு எனது ஊழியங்களை நிறைவேற்றி வருகின்றேன். இப்போது வீல்செயரில் உட்கார்ந்து என் பணியை என்னால் முடிந்தமட்டும் நிறைவேற்றி வருகிறேன். மனநிறையுடனும் சந்தோஷத்துடனும் கர்த்தர் நியமித்த ஓட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறேன்.

# Sis ராணி புளோரா



சகோதரி ராணி புளோரா அவர்கள் தனது 95வது வயதில் கர்த்தருக்குள் **நித்திரையடைந்தார்.**

**சகோ. ராணி புளோரா** அவர்கள் சேலம் **கிறிஸ்துநாதர் ஆலயத்தில்** Christ Church நீண்ட காலம் ஆர்கன் வாசித்து சபை ஆராதனையில் பாடல் வாசித்து தன் ஊழியத்தை நிறைவேற்றினார்.

சேலம் பள்ளிக்கூடத்தில் **தலைமை ஆசிரியையாக** பணியாற்றி ஓய்வுபெற்றவர். திருமணம் செய்யாமல் வாழ்ந்த இவர் இஸ்லாமிய குடும்பத்திலிருந்து ஒரு குழந்தையை தத்து எடுத்து வளர்த்தி ஆளாக்கி ஊழியக்காரனாகவும் ஆக்கினார். அவர் **பாஸ்டர் திப்பு** என்ற பெயரில் ரஷ்யா மற்றும் முகமதிய நாடுகளில் ஊழியம் நிறைவேற்றினார். பாஸ்டர் திப்பு அவர்கள் தான் **சகோதரி புளோரா** அவர்கள் படுக்கையில் பல மாதங்கள் மரணம் வரை கழித்தார். அவர் மரணம் வரை பாஸ்டர் திப்பு அவர்கள் கவணித்தார்.

சகோதரி ராணி புளோரா அவர்கள் தன் மரண படுக்கையில் சாகும் வரை ஒவ்வொரு தினமும் காலை வழக்கம்போல் முழங்காலில் நின்று வேதம் வாசித்து பாட்டுப்பாடி தேவனை ஆராதித்து வந்தார்.

சகோதரி ராணி புளோரா அவர்கள் நீண்ட கால ஜாமக்காரன் பத்திரிகை வாசகி ஆகும்.

மாதா மாதம் எனக்கு காணிக்கை அனுப்பி என் ஊழியத்தை தாங்கினவராகும். மரணம் வரை சகோதரி ராணி புளோரா அவர்கள் ஜெப வாழ்க்கைகாகவும் வேத வாசிப்புக்காவும் வியாதி படுக்கையிலும் முறுமுறுக்காத அவர் விசுவாச வாழ்க்கைக்காக தேவனை துதிக்கிறேன்.

மகன் **பாஸ்டர் திப்பு** அவர்களுக்கு கர்த்தர் ஆறுதல் அளிப்பாராக.

## நன்றி !!!

உங்களில் சிலர் எனக்கு அனுப்பிய **உதவிதொகை** கிடைத்தது. சிலர் அனுப்பிய **காணிக்கைகளும்** கிடைத்தது. சிலர் ஆன்லைன் NEFTமூலமாகவும் GPAY மூலமாகவும் அனுப்பிய **பணமும்** வந்து சேர்ந்தன. அவற்றிர்க்கு உடனே **ரசீதோ, கடிதமோ** எழுத என்னால் **இயலவில்லை** பொருத்துக்கொள்ளவும்.

பலர் மணி ஆர்டர் MO மூலமாகவும் காணிக்கை அனுப்புகிறார்கள்.

யாவருக்கும் மனதார நன்றி கூறுகிறேன். கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடும் நிலைத்திருப்பதாக,

**OCTOBER- 2025**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**